www.tamilarangam.net

# புதிய - ஜனநாயக கட்சி

[ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ]

இரண்டாவது தேசிய மாநாடு

மே 4, 5 – 1991 கொழும்பு

## பத்திரிகை அறிக்கை

தேசிய ஜனநாயகத்தை
மீட்டெடுத்து நிலைநிறுத்தி –
சுயநிர்ணய உரிமையை
வென்றெடுப்போம்!

- தேசிய பொருளாதாரம்
- தேசிய சுதந்திரம்
- தேசிய இனங்களின் ஐக்கியம்

பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில்
பரந்த ஐக்கிய முன்னணியை
கட்டியெழுப்புவோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய-ஜனநாயக கட்சி
# இரண்டாவது தேசிய மாநாடு
# பத்திரிகை அறிக்கை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இரண்டாவது தேசிய மாநாடு 1991 மே மாதம் 4ம், 5ம் திகதிகளில் கொழும்பு நகரில் நடைபெற்றது. இம் மாநாடு தேசிய நிலைமை — தேசிய இனப் பிரச்சினை — சர்வதேசிய நிலைமை ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியல் அறிக்கை, ஸ்தாபன அறிக்கை, அமைப்பு விதிகளுக்கான திருத்தம், நீண்டகால — உடனடி வேலைத்திட்டம், கட்சிப் பெயர் மாற்றம் ஆகிய அம்சங்களை மாநாட்டு நிகழ்ச்சி நிரலாகக்கொண்டு விவாதங்களையும் முடிவுகளையும் மேற்கொண்டது. மாநாடு புதிய மத்திய குழுவையும் தேர்ந்தெடுத்துக்கொண்டது.

## தேசிய நிலைமை

தேசிய நிலைமை பற்றி அறிக்கை விரிவாக ஆராய்ந்தது. கடந்த நான்கு தசாப்தங்களில் இடம்பெற்றுவந்த பொருளாதார, அரசியல் சமூக கலாச்சார மாற்றங்களையும் வளர்ச்சிப் போக்குகளையும் மாக்சிச லெனினிசப் பார்வையில் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கியது. குறிப்பாக 1971ம் ஆண்டுக்கு பிற்பட்ட சுமார் பதின்நான்கு ஆண்டு கால யூ. என். பி. ஆட்சியின் கீழ் இடம்பெற்று வந்த பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சார செயற்பாடுகளின் அடிப்படைத் தன்மைகளையும், அவற்றின் விளைவுகளையும் விரிவாகச் சுட்டிக்காட்டிய அரசியல் அறிக்கை இன்றைய நிலை முழு நாட்டிற்கும் மக்களுக்கும் விரோதமான போக்கைக் கொண்டிருப்பதையும், இதனை எதிர்த்து முறியடித்து சரியான திசை வழியில் நாட்டையும் மக்களையும் வழி நடத்திச் செல்லும் பெரும் பொறுப்புக்கு தொழிலாளி வர்க்க இயக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கங்களும் ஏனைய ஜனநாயக தேச பக்த இயக்கங்களும் ஐக்கியப்பட்டு முன் செல்ல வேண்டியதன் தேவையையும் அறிக்கை எடுத்துக்காட்டியது.

மேலும் அரசியல் அறிக்கையில், திட்டமிட்ட வழிகளில் தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்ற இந்நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக புதியவகையான காலனித்துவத் தன்மை கொண்ட பொருளாதார அமைப்பு முறை புகுத்தப்பட்டு வருகின்றது. அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் கோரச் சுரண்டலுக்கும், தாராள சந்தைக்கும் நாடு தாரைவார்க்கப்பட்டு வருவதைக் காண முடியும். அத்துடன் அரசியல், கலாசார, சமூகத்துறைகள் அனைத்திலும் ஏகாதிபத்திய முதலாளித்துவ ஊடுருவல்களும் ஆதிக்கங்களும் வலுவடைந்து வருவதை எடுத்து விளக்கிய அறிக்கை இவற்றை நவ காலனித்துவமாகச் சுட்டிக்காட்டியது.

இந் நவகாலனித்துவ சுரண்டல் முறையினைப் பாதுகாக்க அரசியல் அடக்குமுறைகளுக்கான சட்டங்கள் கொண்டுவரப்பட்டதன் அடிப்படைகளை அறிக்கை விளக்கியது. அரசியல் சாசனத்தின்மீதான திருத்தங்கள், அவசரகாலச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் (வேலைநிறுத்தங்களைத் தடுக்கும்) சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம். அரசியல் அமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டம். பல்கலைக்கழக மாணவர்களை அடக்கும் சட்டங்கள் என்பனவற்றுடன் ஆயுதப்படைகளுக்கான அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன போன்ற அடக்குமுறைச் செயற்பாடுகளை அறிக்கை சுட்டிக் காட்டியது. இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களால் மக்களின் அடிப்படை ஜனநாயக — தொழிற்சங்க — மனித உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு மோசமான வழிகளில் அடக்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் — இளைஞர்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். தடுத்து வைக்கப்பட்டவர்களின் விபரமோ எண்ணிக்கையோ வெளியிடப்படவில்லை. மேற்குறித்த செயற்பாடுகள் யாவும் பாசிச வழிகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிக்கை எடுத்து விளக்கியது.

அதே வேளை மேற்கூறிய பொருளாதார அமைப்பானது விலைவாசி உயர்வு, பணவீக்கம், வேலை இன்மை, வாழ்க்கைத்தர வீழ்ச்சி என்பனவற்றையே மக்களுக்கு வழங்கியுள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கப் பிரிவினர், சிறு முதலாளித்துவ வர்க்கத்தினர் மட்டுமன்றி தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினர் உட்பட ஏகப் பெரும்பான்மையான மக்கள் இன்றைய பொருளாதார அமைப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். மறுபுறத்தில் அந்நிய பல்தேசிய நிறு-



வனங்களும் அவற்றின் ஏகாதிபத்திய முதலாளித்துவ உரிமையாளர்களும், உள்நாட்டுப் பெரு முதலாளிகளும் மிக ஆடம்பரமாகச் சுக போகங்களை அனுபவித்து வருகின்றனர்.

## தற்போதைய சமூக அமைப்பு

இவற்றை விரிவாக ஆராய்ந்த அரசியல் அறிக்கையானது, இலங்கையின் தற்போதைய சமூக அமைப்பின் தன்மையை ஒரு நவ காலனித்துவ—பிரபுத்துவ—பெரு முதலாளித்துவ அமைப்பாகச் சுட்டிக் காட்டி இத்தகைய அமைப்பைக் கட்டிக்காப்பதில் பெரு முதலாளித்துவ—பேரினவாத—பாசிச யூ. என். பி. அரசாங்கம் தன்முனைப்புடன் செயலாற்றி வருவதையும் எடுத்துக்காட்டியுள்ளது. இவ்வாறு ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கும், நவ காலனித்துவ—பிரபுத்துவ—பெரு முதலாளித்துவத்திற்குமிடையிலான முரண்பாடே இலங்கையின் இன்றைய பிரதான முரண்பாடு என்பதையும் அறிக்கை தெளிவு படுத்தியது. இப் பிரதான முரண்பாட்டின் பொது எதிரியாக மக்கள் முன் எழுந்து நிற்பது ஆளும் பெரு முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கமேயாகும். இப் பொது எதிரியான யூ. என். பி. தன்னை மறைத்துக்கொள்ள தேசியம், ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம் என்பன போன்ற மாயாஜாலப் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. ஆதலால் தொழிலாளி வர்க்கமும், விவசாயிகளும், சிறுமுதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ சக்திகள் உட்பட உழைக்கும் மக்கள் அனைவரும் இப் பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட்டு முன்செல்லவேண்டியதன் அவசியத்தை அரசியல் அறிக்கை வற்புறுத்தியது.

மேலும் அரசியல் அறிக்கை கூறுவதாவது:- சுரண்டலும் அநீதியும் கொண்ட இன்றைய பொருளாதார அரசியல் அமைப்பு முறைக்குப் பதிலாக நீண்டகாலப் போராட்ட அடிப்படையில் வென்றெடுக்கப்படவேண்டிய அமைப்பு முறை புதிய ஜனநாயக அமைப்பும் அதனைத் தொடர்ந்த சோசலிச அமைப்பும் என்பதை மிகத் தெளிவுடன் எடுத்துக்காட்டியது. வர்க்கப் போராட்ட அடிப்படையில் மாக்சிச லெனினிச அனுபவங்கள் எடுத்துக்காட்டும் வெகுஜனப் புரட்சிகர மார்க்கத்தில் ஐக்கியப்படக்கூடிய சகல சக்திகளையும் வர்க்கப் பிரிவினர்களையும் ஓர் ஐக்கிய முன்னணி மூலம் இணைத்தே இப் புதிய - ஜனநாயக அமைப்பையும் அதனுடன் இணைந்த சோசலிச அமைப்பையும் வென்றெடுத்து நிலைநிறுத்த முடியும் என்ற முடிவை அறிக்கை தெளிவுபடுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உடனடிக் கடமை

இத் நீண்டகாலப் பணிக்கான பாதையில் கட்சி கடும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளை நாட்டையும் மக்களையும் எதிர்நோக்கி நிற்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து நிற்கவேண்டியதன் அவசியத்தையும் அறிக்கை வலியுறுத்தியது. அந்த வழியில் இன்று மக்களிடம் இருந்து பறித்து அடக்கப்பட்டுள்ள அடிப்படை ஜனநாயக—தொழிற்சங்க—மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலைநிறுத்துவதை உடனடிக் கடமையென அறிக்கை வற்புறுத்தியது. இதனையே தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்துதல் என அர்த்தப்படுத்துகின்றது, இத் தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்தும் போராட்டத்தில் ஜனநாயக முற்போக்கு சக்திகள் வெற்றி பெறுவதன் மூலமே தேசிய பொருளாதாரத்தையும் தேசிய சுதந்திரத்தையும் கட்டிஎழுப்பி பாதுகாக்க முடியும் என்ற தெளிவுரையையும் அறிக்கை கொண்டிருந்தது. இவ் உடனடிக் கடமையான தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்தும் போராட்டத்தில் பல்வேறு தத்துவார்த்தங்களையும் கொள்கைகளையும் கொண்ட அரசியல் சக்திகளும், வர்க்க சக்திகளும் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுவதையே நாடும்—மக்களும் எதிர்பார்க்கின்றனர் என்பதை அறிக்கை தெளிவுபடுத்தியது.

## தேசிய இனப் பிரச்சினை

மேலும் தேசிய இனப் பிரச்சினை பற்றி அரசியல் அறிக்கை விரிவானதும் தெளிவானதுமான கொள்கையை முன்வைத்தது. தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு இன்றைய இலங்கையின் பிரதான முரண்பாடல்ல. ஆனால் இனப்பிரச்சினை கூர்மையடைந்து பிரதான தேசியப் பிரச்சினையாக வளர்ந்துள்ளதையும் அதன் மூலம் வடக்கு, கிழக்கில் யுத்த சூழல் தொடர்வதையும் அறிக்கை மிக உன்னிப்பாக ஆராய்ந்தது. இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள் உள்ளடங்கிய தமிழ் பேசும் மக்கள் பல்வேறு நிலைகளில் எதிர்நோக்கியுள்ள அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வின்மையே தேசிய இனப்பிரச்சினையின் நெருக்கடியாகவும் போராட்டமாகவும் வளர்ந்தது, 1948ம் ஆண்டு இந்திய வம்சாவழித் தமிழர்களின் அடிப்படை குடியியல் — அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டது முதல் எண்பதுகளின் நடுப்பகுதியில் அரசியல் சாசனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டம் வரையான பல்வகைப் பாகுபாட்டுச் சட்டங்களும், புறக்கணிப்புச் செயற்பாடுகளும், திட்டமிட்ட குடியேற்றங்களும் — நீர்ப் பயன்பாட்டில்



பாகுபாடுகளும், கல்வி, தொழில் வாய்ப்பில் இனக் கண்ணோட்டங்கள் என்பனவற்றின் மொத்த விளைவே தேசிய இனப் பிரச்சினை; இதுவே இன்றைய யுத்த சூழலைத் தோற்றுவித்துள்ளமையாகும். இத்தகைய தேசிய இன நெருக்கடிக்கு இராணுவ வழிகளின் மூலம் தீர்வு காண முடியாது என்பதை வலியுறுத்திய அறிக்கை நியாயமான அரசியல் தீர்வே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒரே வழி என்பதையும் சுட்டிக்காட்டியது. இவ் அரசியல் தீர்வுக்கு முத்தரப்புப் பேச்சுவார்த்தையே யதார்த்தபூர்வமான நடவடிக்கையாக அமைய முடியும். இலங்கை அரசும் — அரசியல் கட்சிகளும் ஒரு தரப்பாகவும், விடுதலைப் புலிகளும் — ஏனைய தமிழர் அமைப்புக்களும் மறு தரப்பாகவும், இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க நலனை முன்தள்ளாத வகையில் மூன்றாவது தரப்பாகவும் செயல்பட்டு முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை அடிப்படையிலான அரசியல் தீர்வே தேசிய இனப் பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வைக் கொண்டுவர உள்ள சரியான வழிமுறையாகும் என அறிக்கை முன்மொழிந்தது.

இத் தீர்வானது வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்திற்கான பூரண அதிகாரம் கொண்ட பிரதேச சுயாட்சியை வழங்குவது இப்பிரதேச சுயாட்சியின் கீழ் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலான சுயாட்சி உள்ளமைப்புகளை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் உருவாக்கி அவர்களது தனித்துவ வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்துவது. அதேபோன்று மலையகத்திலும் ஏனையபிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் இந்தியவம்சாவழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரசாவுரிமையைப் பூரணப்படுத்தி அவ்வப் பிரதேசங்களில் அவர்களுக்கான நிலத்தை வழங்கி சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி உள்ளமைப்புக்களை உருவாக்கி அவற்றுக்கான அதிகாரங்களை வழங்கி நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களது தனித்துவத்தையும் பொருளாதார, கல்வி, சமூக, கலாச்சார விருத்திகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என அறிக்கை தெளிவாகச் சுட்டிக்காட்டியது. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான மேற் குறித்த விடயங்களை மிக எளிதில் சென்றடைய முடியாது; ஏனெனில் அந்தளவிற்கு தேசிய இனப் பிரச்சினை சிக்கலாக்கப்பட்டும், உயிர், உடமை இழப்புக்களையும், இரத்தவெள்ளத்தையும் கொண்ட யுத்த சூழலுக்குள் பேரினவாத—பாசிச ஆட்சியினால் தள்ளப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொண்ட அறிக்கை சுயநிர்ணய உரிமையை வென்றெடுத்தல் என்ற நிலையில் பெரும் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியது. இதற்கான போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் மட்டுமன்றி சிங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் மக்களையும் அணிதிரட்டியே ஆகவேண்டும். அதுமட்டுமன்றி இச் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது, ஏற்கனவே அறிக்கை வரையறை செய்து சுட்டிக்காட்டிய தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்தும் போராட்டத்துடன் இணைந்ததாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியது. அதனையே நமது கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு இன்றைய உடனடித் தேவையும் கடமையும் தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலை நிறுத்துவதும் — சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதும் எனப் பிரகடனம் செய்துள்ளதை அறிக்கை பட்டவர்த்தனமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

## சர்வதேச நிலைமை

இன்றைய சர்வதேச நிலைமை பற்றிக் குறிப்பிட்ட அரசியல் அறிக்கையானது உலக மேலாதிக்கத்திற்காக முயன்று வரும் மேலாதிக்க வல்லரசுகள் மூன்றாம் உலக நாடுகளின் மூலவளங்களைக் கொள்ளையடித்துச் செல்வதிலும் அந்நாடுகளில் தமக்கு வசதியான ஆட்சிகளைத் தக்கவைத்துக்கொள்வதிலும் மிகக் கவனமாக இருந்து வருவதனை விளக்கிக் காட்டியது. அண்மைய வளைகுடா யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டணி நாடுகளும் தமது சுய உருவத்தையும் நோக்கத்தையும் உலக மக்களுக்கு அம்பலப்படுத்தி விட்டன. அதேவேளை இதே சக்திகள் உலகில் சோசலிச அமைப்பு முறை தோல்வி கண்டு வருவதாகவும் பெரும் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளன. இன்று சோஷலிசத்திற்கு நெருக்கடி உருவாக்கப்பட்டுள்ளமை உண்மைமேயாகும். கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட நிலைமையும் சோவியத் யூனியனில் இடம் பெற்று வரும் மாற்றங்களும் உலக சோசலிச சக்திகளுக்கு தற்காலிகத் தளர்ச்சியைக் கொடுத்திருப்பினும் இந்நிலைமை விரைவான மாறுதலுக்கு உள்ளாகும் என்பதில் அறிக்கை பூரண நம்பிக்கை தெரிவித்தது. சோஷலிசத்திற்கான தற்போதைய நெருக்கடியின் பெரும் பங்கு வகிப்பது, அன்று சோவியத்யூனியனில் குருஷ்சேவ் தொடக்கிவைத்த நவீன திரிபுவாதப் பாதையேயாகும், அதன் உச்சநிலையாகவே இன்றைய கோர்பச்சேவ் தனது மோசமான செயற்பாடுகளின் மூலம் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருவதுடன் அமெரிக்க – மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளுக்கு அடிபணிந்து மகிழ்வூட்டியும் வருகின்றார் என அறிக்கை சுட்டிக்காட்டியது.

சோவியத் யூனியனும் கோர்பச்சேவும் எடுத்துவரும் பன்முக நடவடிக்கைகள் உலக மாக்ஸிஸ லெனினிச இயக்கங்களுக்கும் சோஷலிச சக்திகளுக்கும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துவரும் அதேவேளை



சோஷலிச சீனத்தில் இடம் பெற்று வரும் நிகழ்வுகள் மிக நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதையும் அறிக்கை வரவேற்றுள்ளது. குறிப்பாக சீனாவில் இரண்டு வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டு உள்நாட்டு பிற்போக்கு சக்திகளால் முன்தள்ளப்பட்ட "மாணவர் இயக்கம்" உரிய முறையில் இனங்காணப்பட்டு அடக்கப்பட்டமையை அரசியல் அறிக்கை மனப் பூர்வமாக வரவேற்றது. இச் சோஷலிஸ விரோத மாணவர் இயக்கத்தின் பிற்போக்குத் தன்மை சீனமக்களாலும் உலக மக்களாலும் நன்கு இனங்காணப்பட்டதையும் அறிக்கை சுட்டிக் காட்டியது. மேலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது வழிகாட்டும்கோட்பாடுகளாக (1) கம்யூனிஸ்ட்கட்சித் தலைமை (2) மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் (3) சோஷலிசப் பாதை (4) மார்க்ஸிஸ லெனினிஸம் மாசேதுங் சிந்தனை என்பவற்றை உறுதியாக முன்னெடுத்து வருவதை அறிக்கை வரவேற்று அதற்கான தனது ஆதரவையும் தெரிவித்துக் கொண்டது. இச் சோஷலிசப் போக்கிற்கு வலுவூட்டுவதுபோல கொரியா, கியூபா அல்பேனியா போன்ற சோஷலிச நாடுகளின் சோஷலிச உறுதிப்பாட்டிற்கான செயற்பாடுகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் அரசியல் அறிக்கை வரவேற்றது.

மேலும் இவ்வறிக்கை உலக மேலாதிக்க வல்லரசுகளுக்கும் அவற்றின் கொடுமைகளுக்கும் எதிராகவும் பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகவும் பல்வேறு வழிகளிலும் வடிவங்களிலும் போராடி வரும் அனைத்து விடுதலை இயக்கங்களுடனும் மாக்ஸிஸ லெனினிஸக் கட்சிகள், ஸ்தாபனங்களுடனும் அறிக்கை தனது ஒருமைப்பாட்டையும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வதையும் பிரகடனம் செய்து கொண்டது. மூன்றாம் உலக நாடுகளின் மக்களும் உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் புயலென எழுந்து தம் முன்னே உள்ள ஏகாதிபத்திய முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளை முறியடித்து தூக்கிவீசி முன்செல்வார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்திய அரசியல் அறிக்கை அத்தகைய சர்வதேசப் போராட்டப் பெரும்படை அணிவகுப்பில் இந் நாட்டு மக்களாகிய நாமும் உறுதியாக இணைந்து நிற்போம் என்ற திடசங்கற்பத்தினையும் வெளிப்படுத்தியது.

## கட்சிப் பெயர் மாற்றம்

கட்சியின் தற்போதைய பெயரான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரை இவ் இரண்டாவது தேசிய மகா நாடு புதிய – ஜனநாயக கட்சி எனப் பெயர் மாற்றம் செய்து கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டது. அதற்கான காரணத்தை விளக்குகையில் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயர் பலவழிகளாலும் சீரழிக்கப்பட்டமையினை அறிக்கை எடுத்து விளக்கியது. பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தாலும், அதி தீவிர ஒருமுனை வாதத்தாலும் கொச்சைப்படுத்தப்பட்ட மேற்படி பெயரில் பிளவுகளுக்கு உள்ளான சகல பிரிவினருமே கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைக் கொண்டிருந்தனர். மேலும் இன்றைய சூழலில் பரந்த ஐக்கிய முன்னணி கட்டப்படும் தேவையாலும் புதிய ஜனநாயக அமைப்பைப் பெறும் கொள்கையை முன்வைத்திருப்பதாலும் புதிய ஜனநாயக கட்சி என்ற பெயர் முற்றிலும் பொருத்தமானதென்றே மகாநாடு மேற்படி பெயரை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

இவ் இரண்டாவது தேசிய மாநாடு தனது இரண்டு நாள் மாநாட்டின் முடிவில் புதிய மத்தியகுழுவைத் தெரிவு செய்தது. புதிய மத்திய குழு தோழர் சி. கா. செந்திவேல் அவர்களைப் பொதுச் செயலாளராகவும், தோழர் இ. தம்பையா அவர்களை தேசிய அமைப்பாளராகவும் தோழர் சோ. தேவராஜா அவர்களை பொருளாளராகவும் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

இவ் இரண்டாவது தேசிய மாநாட்டிற்கு வடக்கு கிழக்கு, மலையகம், கொழும்புப் பிரதேசங்களில் இருந்தும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டின் அரசியல் முடிவுகளை வெளிப்படுத்தும் வகையில் 'இன்றைய அரசியல் நிலையும் இலங்கையின் எதிர்காலமும்" என்னும் தலைப்பில் 5. 5. 91 பிற்பகலில் கொழும்பு அரசாங்க லிகிதர் சேவை சங்க மண்டபத்தில் பகிரங்க அரசியல் கருத்தரங்கு ஒன்றும் இடம் பெற்றது.

தேசிய ஜனநாயகத்தையும் – சுய நிர்ணய உரிமையையும் வென்றெடுப்போம்.

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வை நோக்கி முன் செல்வோம்!

இ. தம்பையா
தேசிய அமைப்பாளர்

சி. கா. செந்திவேல்
பொதுச் செயலாளர்

கொழும்பு,
6. 5. 1991.

புதிய ஜனநாயக கட்சி
26/ 74, வைத்தியா வீதி,
தெஹிவளை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உடனடி வேலைத்திட்டம்

1. தற்போதைய ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, தேச விரோத யூ. என். பி. பெரு முதலாளித்துவ—பேரினவாத—பாசிஸ்ட் அரசை எதிர்த்து நிற்கக் கூடிய சகல அரசியல் கட்சிகளையும்—ஸ்தாபனங்களையும் உள்ளடக்கிய பொது முன்னணி ஒன்றினை உறுதியான பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பி அதன் தலைமையில் மக்களை அணிதிரட்டி சக்தி மிக்க வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது. இப் பொது வேலைத்திட்டத்தின் பிரதான அம்சம் தேசிய ஜனநாயகத்தையும்—சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுத்து நிலைநாட்டுவதாக அமையவேண்டும்.

2. சக்திமிக்க வெகுஜனப் போராட்டங்களின் மூலம் ஆளும் அரங்கிலிருந்து அகற்றப்படும் யூ. என். பி. அரசாங்கத்தின் இடத்தை நீதியானதும் நியாயமானதுமான சுதந்திர பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் ஜனநாயக அரசாங்கத்தினால் நிறைவு செய்வதற்கு ஏற்ற வழிவகைகளை ஏற்படுத்தல்.

3. ஜனநாயகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் ஓர் தேசிய நிர்ணய சபை மூலமாக இன்றைய அரசியலமைப்புக்குப் பதிலான புதிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அவ்வரசியலமைப்பானது தற்போதைய நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அதி உயர் அதிகாரத்தை வழங்கக்கூடிய வகையில் அமைவதுடன், மக்கள் நலன், தேசநலன், தேசிய இனங்களுக்கிடையிலான இணக்க நலன் அடிப்படையில் சகல மக்களுக்கும் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும் உத்தரவாதம் செய்யக்கூடிய வகையில் உருவாக்கிக் கொள்ளப்படவேண்டும்.

www.tamilarangam.net

4. தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், அரசியல் அமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம், மாணவர்களை ஒடுக்கும் நோக்கிலான பல்கலைக்கழகச் சட்டங்கள் போன்ற அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் உடன் அகற்ற வேண்டும். அத்துடன் சகல வகை சார்ந்த துணைப் படைகளும்—விசேஷப் படைகளும் கலைக்கப்பட்டு ஆயுதப் படைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அளவுக்கு மீறிய அதிகாரங்கள் அனைத்தும் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். அதேவேளை சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், இராணுவ முகாம்கள், விசாரணைக் கூடங்கள் அனைத்திலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்தல் வேண்டும்.

5. 1977 ஆம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்றுவந்த ஜனநாயக—தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் விசாரணையில் முழுநாட்டிலும் ஏற்கனவே கொல்லப்பட்டும், காணாமற்போயுள்ளவர்களின் விபரங்கள் வெளியிடப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய நஷ்ட ஈடும், புனர்வாழ்வும் வழங்கப்படவேண்டும். அதேவேளை குற்றவாளிகள் எத்தரத்தை உடையவர்களாக இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும்.

6. தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான ஓர் இடைக்காலத் தீர்வு முத்தரப்புப் பேச்சுவார்த்தை அடிப்படையில் காண்பதற்கு சகல நடவடிக்கைகளும் தாமதமின்றி முன்னெடுக்கப்படல்வேண்டும். இத் தீர்வானது சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பூர்ண அதிகாரம் கொண்ட வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசத்திற்கான பிரதேச சுயாட்சியாகவும்; முஸ்லீம் மக்கள், இந்திய வம்சாவழி மக்கள் ஆகியோருக்கான சுயாட்சி உள்ளமைப்புக்களாகவும் கொண்டிருப்பதுடன் இவை அரசியலமைப்பு வாயிலாக உறுதியையும் உத்தரவாதத்தையும் கொண்டிருக்கவேண்டும், மேலும் வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த கோர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர், உடைமை, இருப்பிடம், தொழில் இழப்புக்களைப் பெற்ற அனைத்து மக்களுக்கும் பூர்ண நஷ்டஈடும்—தகுந்த புனர்வாழ்வையும் குறுகிய கால எல்லைக்குள் வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வது



7. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி, அதற்கேற்ற சம்பள உயர்வை வழங்கி தொழிலாளர்கள், ஊழியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உழைக்கும் மக்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

8. திட்டமிட்ட பாரிய கைத்தொழில், விவசாய அபிவிருத்திக்கு உரிய அடிப்படைகளை உருவாக்கி முன்னெடுக்கும் அதேவேளை விவசாய, சிறுகைத்தொழில் உற்பத்திகளுக்கு ஊக்கமும் முதன்மையும் கொடுத்து விவசாயிகளுக்கும் சிறு கைத்தொழிலாளர்களுக்கும் உரிய வாய்ப்புக்களை வழங்கவேண்டும். தொழில், விவசாய அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் சகல பிரதேசங்களுக்கிடையிலும் சமத்துவ அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும். இதன்மூலம் வெளிநாடுகளுக்கு நமது மனித வளம் ஏற்றுமதி செய்யப்படுவது ஆகக் குறைந்த மட்டத்துக்கு வருவதுடன் திட்டமிட்ட தேசிய பொருளாதார வளர்ச்சியானது துரிதகதியில் விருத்திபெற்று பலம்பெற உரிய நடவடிக்கைகளை ஏற்படுத்துவது.

9. ஏற்றுமதி இறக்குமதி உட்பட அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் தாராள சுரண்டலுக்கும், திட்டமிட்ட தேசிய பொருளாதார வளர்ச்சியைச் சிதறடித்து நமது நாட்டைத் தமது சந்தையாக வைத்திருக்கும் அவர்களின் திறந்த பொருளாதாரக் கதவு கொள்கைக்குத் தகுந்த கட்டுப்பாட்டை விதித்து நமது தேசிய பொருளாதாரத்தை ஸ்திரமாக்கி முன்னெடுப்பது. விவசாய உற்பத்திகளும் சிறுகைத்தொழில் முயற்சிகளும் கொள்வனவு, விற்பனை யாவும் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி அவற்றின் ஊடாக செயற்படுவது. இதற்கென ஒரு திட்டமிட்ட தேசிய பொருளாதாரக் கொள்கையை வகுத்துக்கொள்வது.

10. தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தேசிய வாழ்வில் அரசாங்க, தனியார் துறையினரைவிட தனி ஒரு பிரிவினராக நடத்தப்படும் தற்போதைய முறையை ஒழித்து; அவர்களது பிரஜாவுரிமை, வாக்குரிமை என்பனவற்றை நடைமுறையில் பூரணப்படுத்தி; நிலம் வழங்கப்படுவதில் காட்டப்படும் திட்டமிட்ட பாகுபாட்டை ஒழித்து; மற்றும் வசிப்பிடம், சுகாதாரம், கல்வி வாய்ப்புக்களை மிகுந்த அக்கறையுடன் விரிவுபடுத்தி விருத்தி செய்தல்.

11. நாட்டின் மொத்த எண்ணிக்கையில் அரைப்பங்கினராக விளங்கும் பெண்கள் சகல துறைகளிலும் இரண்டாந்தர அடிப்படையிலான பாகுபாடுகளுக்கும் ஒடுக்கல்களுக்கும் எதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்து பெண்களின் நலவுரிமைகளுக்கும் சமத்துவ நிலைக்கும் உறுதியான செயற்பாட்டினை முன்னெடுப்பது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12. விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வியை மாவட்டங்கள்தோறும் விருத்தி செய்து அவற்றை தொழில், விவசாய விருத்தியுடன் இணைத்து தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது. அத்துடன் சமூகநல விருத்திக்குப் பங்காற்றக்கூடியதும்; சமூக உணர்வையும்-மனித நேயப் பண்புகளை வளர்க்கக்கூடியதுமான திட்டமிட்ட தேசிய கல்விக் கொள்கை ஒன்றினை இன வர்க்க, மத, மொழி, சாதி, பால், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் வகுத்து முன்னெடுத்தல். சகல இன மக்களினதும் கலாசார விழுமியங்களின் நல்லம்சங்கள் அனைத்தையும் பாதுகாத்து புதிய சூழலில் விருத்திசெய்து முன்னெடுக்கக்கூடிய தேசிய கலாசாரக் கொள்கை ஒன்றினை வகுத்து முன்னெடுப்பதுடன் நச்சுத்தனம் கொண்ட விதேசிய கலாசார ஊடுருவல்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்துவது.

13. எண்பதுகளில் இருந்து தனியார் மயமாக்கல் கொள்கை அடிப்படையில் அரசாங்க, கூட்டுத்தாபன கூட்டுறவுத்துறைகளில் இருந்து வெளிநாட்டு-உள்நாட்டு பெருமுதலாளிகளிடம் கையளித்த சகல துறை நிறுவனங்களும், நிலங்களும் மீளக் கையேற்கப்பட்டு அவை தகுந்த முறையில் இயங்க வழிவகை செய்யப்பட வேண்டும். அதே வழியில் கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற அத்தியாவசிய துறைகளில் புகுத்தப்பட்ட தனியார் லாப நோக்குடைய நடைமுறை ஒழிக்கப்பட்டு மக்கள் நலன் சார்ந்த நடைமுறைக் கொள்கை பின்பற்றப்படல் வேண்டும்.

4. இன்றைய சமூகநிலை (சாதி, இன, பிரதேச, வர்க்கம்) காரணமாக நாட்டின் எப்பகுதியிலேனும் காணப்படும் பின்தங்கிய மக்கள் பிரிவினர் உரிய முறையில் இனங்காணப்பட்டு அவர்களது சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15. தற்போதைய யூ. என். பி. அரசு பின்பற்றிவரும் முற்றிலும் மேற்குலகு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது கைவிடப்பட்டு உறுதியான நடுநிலைக் கொள்கை பின்பற்றப்படல்வேண்டும். அதேவேளை உலக மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகவும், பிராந்திய மேலாதிக்க நோக்கத்திற்கு எதிராகவும் விழிப்புடன் இருக்க வேண்டும், உலகின் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுடனும்-அவர்களின் விடுதலைப் போராட்டங்களுடனும் மிக நெருக்கமாக ஐக்கியப்படுவதுடன் இந்திய உபகண்டத்தின் மக்களுடனும் அவர்களது சமூக நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டங்களுடனும் எமது ஒருமைப்பாட்டை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். அதே வேளைமூன்றாம் உலக நாடுகளின் ஐக்கியத்திற்கும்அவர்கள் தமது தேசிய சுதந்திரம் தேசிய பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்காக முன்னெடுக்கும் சகல முயற்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் எமது வெளியுறவுக் கொள்கையானது பக்கபலமாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளல்வேண்டும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

PRINTED BY THE KUMARAN PRESS 201 DAM STREET COLOMBO 12